ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2375/11 – 2024 මාර්තු මස 11 වැනි සඳුදා – 2024.03.11
2375/11 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 11 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவு (அ) வின் கீழான கட்டளை*

***2023 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் கட்டளை***

எனது குறிப்பு இல. : 4-3/5/2018/HA/105.
பிரதேச செயலாளர் குறிப்பு இல.: DSM/YTT/LAND/5/50.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவு (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அவ்வட்டணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் இருப்பாட்சியை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல.1200/6, காணிச் செயலகம்,
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2024, பெப்புருவரி 01.

அட்டவணை

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்** : பிரதேச செயலாளர், யட்டவத்தை.

2. **காணியின் விபரம்**: மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், யட்டவத்தை பிரதேச செயலாளர் பிரிவில், இல. E 339 B வாலவெல கிராம அலுவலர் பிரிவில் வாலவெல கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. மா 1844 காணி விபரப் பட்டியலின் தாள் இல. 1 மற்றும் 2021.07.13 ஆந் திகதிய இறுதி கிராம வரைபடத்தில் பின்வரும் காணித் துண்டின் எல்லை:

01. **துண்டு இல. 1 – வாலவெல கும்புர அல்லது மாலிகாவே கும்புர - விஸ்தீரணம்: 0.0607 ஹெக்டயார்**

வடக்கு: வீதி (பிரதேச சபை) மற்றும் டி. டப்ளியூ. ஏ. பத்ரலதா உரிமைகோரும் மொரகஸ்பிட்டிய வத்தை; கிழக்கு: டி. டப்ளியூ. ஏ. பத்ரலதா உரிமைகோரும் மொரகஸ்பிட்டிய வத்தை மற்றும் ஜயதிஸ்ஸ எரமுதுகொல்ல உரிமைகோரும் பொல்வத்தை ; தெற்கு: கால்வாய் மற்றும் ஜயதிஸ்ஸ எரமுதுகொல்ல உரிமை கோரும் மாலிகாவே கும்புர; மேற்கு: ஜயதிஸ்ஸ எரமுதுகொல்ல உரிமைகோரும் மாலிகாவே கும்புர மற்றும் வீதி (பிரதேச சபை).

EOG 03 - 0095

*திருத்தம்*

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழான கட்டளை*

***2023 ஆம் ஆண்டின் 165 ஆம் இலக்கக் கட்டளை***

*எனது இல.* : 4-3/18/2021/WS/161.
*பிரதேச செயலாளர் குறிப்பு இல.*: KDS/TUM/4/1/1/12.

*2023.09.19 ஆம் திகதிய 2350/18 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் 1A பக்கத்தில் சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 165 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவகத்தின் விபரம்: "மஹநுவர வடக்கு - பாததும்பர ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டத்தின் கல்லேனவத்தை சேவை தீர்த்தேக்கம் வரையில் கடத்தும் குழாய்களை அமைப்பதற்கும் அதிலிருந்து விநிகேயாக குழாய்களை அமைப்பதற்காக காணியின் ஒரு பகுதி உரிமையை எடுத்துக்கொள்ளல்" என பிழையாக வெளியிடப்பட்டுள்ளது. எனவே இது "மஹநுவர வடக்கு - பாததும்பர ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டத்தின் கல்லேன்வத்தை சேவை நீர்த்தேக்கம் வரையில் கட்த்தும் குழாய்களை அமைப்பதற்கும் அதிலிருந்து விநியோக குழாய்களை அமைப்பதற்காக காணியின் ஒரு பகுதி சேவக உரிமையை எடுத்துக்கொள்ளல்" எனவும் திருத்தப்படுகிறது என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*ஹரின் பெர்னாண்டோ,*
*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.*

*சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,*
*"மிஹிகத மெதுர",*
*காணிச் செயலகம்,*
*இல. 1200/6, இராஜமல்வத்தை வீதி,*
*பத்தரமுல்லை,*
*2024, பெப்புருவரி 01.*

EOG 03 - 0098

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் அச்சிடப்பட்டது.*